# <u>அறந்தா§» நகராட்சி</u>

## <u>நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

## <u>ஸ்ரீ விகாரி வருடம் ஆடி மாதம் 16–ஆம் நாள் ஜீலை மாதம் 31.07.2020ம் நாள் வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள் விபரம்</u>

<table>
<tr>
<td><u>பொருள் எண். 1</u></td>
<td>நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களின் ஜீன்–2020ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:–</u><br>பதிவு செய்யலாம்</td>
<td><u>தீர்மான எண்:–</u> 36<br><u>தீர்மானம்:–</u> பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண். 2</u></td>
<td>இந்நகராட்சியில் அவசர அவசியம் கருதி கீழ்கண்ட பணிகளை நகராட்சிகளின் சட்டம் பிரிவு–15ன் கீழ் செய்யப்பட்டதையும் அதற்கான செலவினஙகளுக்கும் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>1</td><td>கே.சுப்பிரமணியன், கொஞ்சும் சலங்கை வர்த்தக விளம்பரம்,</td><td>கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைக்காக அனைத்து வார்டுகளிலும் விழிப்புணர்வு விளம்பரம் செய்தது தொடர்பாக</td><td>ரூ.5000.00</td></tr>
<tr><td>2</td><td>Al Bismi multirepairing centre, Aranthangi</td><td>பொது சுகாதாரப்பிரிவு கோவிட் –19 கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளில் கிருமி நாசினி தெளிக்கும் பவர் ஸ்பிரேயர் சரி செய்தவகையில்</td><td>ரூ.1620.00</td></tr>
<tr><td>3</td><td>திரு.சி.சேகர், சுகாதார ஆய்வர்,</td><td>கொரோனா நோய் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கையாக வார்டுகளுக்கு பேனர் மற்றும் ஸ்டிக்கர் பிரிண்ட் செய்தது தொடர்பாக</td><td>ரூ.9500.00</td></tr>
<tr><td>4</td><td>திரு.உ.பாலமுருகன், இநிஉ., அறந்தாங்கி</td><td>தேர்தல் பிரிவு வாக்காளர் அடையாள அட்டை எண்ணை கணினியில் ஸ்கேனர் கருவி வாங்கி வலைதளத்தில் பதிவேற்றம் செய்த வகையில்</td><td>ரூ.2600.00</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:–</u><br>பதிவு செய்யலாம்.</td>
<td><u>தீர்மான எண்:–</u> 37<br><u>தீர்மானம்:–</u> பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 3</u>** | அறந்தாங்கி நகராட்சி பகுதியில் தற்சமயம் கொரோனா வைரஸ் நோய் தொற்று அதிக அளவில் பரவுவதால் தொற்று ஏற்பட்டுள்ள இடங்களில் நோய் தொற்று பரவா வண்ணம் அப்பகுதியை பகுதியை 14 தினங்களுக்கு தனிப்படுத்தி, அவர்கள் இருந்த பகுதியை சுற்றி தடுப்பு வேலி (Containment Zone Barricading ) ஏற்படுத்தும் பணிக்கும், அதற்காக தயார்செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.5.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:–</u>**<br><br>மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2862/2020/இ1) | **<u>தீர்மான எண்:–</u>** 38<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 4</u>** | இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயக்கப்பட்டு வரும் கீழ் கண்டுள்ள வாகனங்களுக்கு 2020–2021ம் ஆண்டிற்கு உண்டான தகுதிச்சான்று பெறவும், ஆயுள் காப்பீடு பிரீமியம் செலுத்தவும் அனுமதிக்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00லட்சத்திற்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>1. டி.என்.55 பி. 5798 – ஈப்பு (கமாண்டர்)<br>2. டி.என். 55 டி 4245 – குடிநீர் டேங்கர் லாரி<br>3. டி.என். 55 எச். 4893 – குடிநீர் டில்லர்<br>4. டி.என். 55 இசட். 7684 – ஈப்பு (பொலிரோ)<br>5. டி.என். 55 ஏ.ஒய் 4797 – ஈப்பு (பொலிரோ)<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br><br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்படி தொகை ரூ.10.00லட்சத்தினை பொது நிதி மற்றும் குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம் (ந.க.எண்.2863/இ1/2020 ) | **<u>தீர்மான எண்:–</u>** 39<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 5</u>** | அறந்தாங்கி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டதின் கீழ் பொது கழிப்பிடங்களை சுத்தம் செய்ய 22 பணியாளர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய டிரஸ்டஸ் அவுட் சோர்சிங் சொலுயுசன் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்த முறைமூலம் 31.07.2020 வரை பணிபுரிய பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. தற்போது கொரோனா நோய் தெற்று காய்ச்சல் (Covid 19) தடுப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டி உள்ள நிலையில் தொடர்ந்து பணியாளர்கள் அமர்த்த வேண்டி உள்ளது. பொது சுகாதாரப்பிரிவின் பணிகள் எவ்வித பாதிப்புமின்றி பணிகளை மேற்கொள்ள பொதுசுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் டிரஸ்டஸ் அவுட் சோர்சிங் சொலுயுசன் பிரைவேட் லிமிடெட் என்ற நிர்வனத்திற்கு வழங்கப்பட்டுள்ள பணி உத்தரவை மேலும் அந்நிறுவனத்திற்கு முன்று மாதத்திற்கு பணி ஆணையை நீட்டித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:–</u>** 40<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 6</u>** | அறந்தாங்கி நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் பொது கழிப்பிடங்களை பராமரிப்பு செய்ய 22 ஒப்பந்த பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ. 10.00 லட்சத்திற்கு ( ரூபாய் பத்து லட்சம் மட்டும் ) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:–</u>** 41<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 7</u>** | இந்நகராட்சி குடிநீர் விநியோகத்தில் தினக்கூலி அடிப்படையில் 5 பணியாளர்களை முற்றிலும் தற்காலிகமாக 6 மாதகாலத்திற்கு பணிக்கு அமர்த்திடவும் அதற்கான செலவினத்திற்கும் இந்நகர்மன்ற தீர்மான எண். 170 நாள்.28.02.2020 மற்றும் இந்நகர்மன்ற தீர்மான எண்.193 நாள்.20.03.2020 மூலம் அனுமதித்துள்ளதனை மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டித்து அனுமதி கோரியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,25,000/– மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0372/2020/இ1) | **<u>தீர்மான எண்:–</u>** 42<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 8</u>** | இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவு டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மூதிர்வு கொசு ஒழிப்பு பணிக்கு தேவையான 2 எண்ணிக்கை போர்டபிள் (Fogging Machine) பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானஎண்: 13 நாள்: 30.06.2020ல் ரூபாய். 2.15 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு கடந்த 31.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br><table><tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>தொகை</th><th>மொத்த தொகை</th></tr><tr><td>1)</td><td>அமுதா ஏஜென்சீஸ் கோயம்புத்தூர் நிறுவனம்</td><td>ரூ. 1,04,160.00/ 1 No</td><td>ரூ. 2,08,320</td></tr><tr><td>2)</td><td>என்.ஆர் டிரைடஸ் கோயம்புத்தூர் நிறுவனம்</td><td>ரூ. 1,03,040.00/ 1 No</td><td>ரூ. 2,06,080</td></tr></table><br><u>அலுவலகக் குறிப்பு:–</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம், வரிசை எண் 2, என்.ஆர் டிரைடஸ் கோயம்புத்தூர் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி ஏற்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>3. அரசின் நிதி உதவி பெறப்படும் பட்சத்தில் இச்செலவினத்தை ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 02344/2020/எச்1) | **<u>தீர்மான எண்:–</u>** 43<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1 மற்றும் 2,3 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| <u>**பொருள் எண். 9**</u> | அறந்தாங்கி நகராட்சியில் டெங்கு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள 30 பணியாளர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய டிரஸ்டஸ் அவுட் சோர்சிங் சொலுயுசன் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்த முறைமூலம் 15.07.2020 வரை பணிபுரிய பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், புதுக்கோட்டை அவர்களின் ந.க.எண்:451/அ3/2020 நாள்:14.7.2020ன் படி மேலும் 50 தற்காலிக பணியாளர்களை நியமித்து தொற்று நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் நகராட்சியில் நிதிநிலையை கருத்தில் கொண்டும், ஊராடங்கு நடைமுறையில் உள்ளதாலும் ஒப்பந்த புள்ளி கோர இயலாத நிலை உள்ளதால் ஏற்கனவே நடைமுறையில் உள்ள 30 களப்பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ள தடுப்பு பணிகள் எவ்வித பாதிப்புமின்றி பணிகளை மேற்கொள்ள பொதுசுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் டிரஸ்டஸ் அவுட் சோர்சிங் சொலுயுசன் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள பணி உத்தரவை மேலும் மூன்று மாத காலத்திற்கு பணி ஆணையை நீட்டிக்கவும் இதற்கான செலவினத்தொகை ரூ.15.00 லட்சத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>**அலுவலகக்குறிப்பு :**</u><br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>3. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம் | <u>**தீர்மான எண்:–**</u> 44<br><u>**தீர்மானம்:–**</u> அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| <u>பொருள் எண். 10</u> | அறந்தாங்கி நகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகாக இந்நகராட்சியின் அனைத்து வார்டுகளுக்கும் கிருமி நாசினி தெளிக்க வேண்டி இருப்பதால் அதற்கு தேவையான கிருமி நாசினி பொருட்கள் வாங்க மற்றும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு தோவையான உபகரண பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச செலவின தொகை ரூ. 10.0 லட்சத்திற்கு (ரூபாய் பத்து லட்சம் மட்டும்)க்கு மன்றப்பொருள் வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக்குறிப்பு:–</u><br><br>1. மன்றம் அனுமதிகலாம்.<br>2. பொது நிதியிலிருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | <u>தீர்மான எண்:–</u> 45<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

ஓம்/–த.பாஸ்கரன்
தனி அலுவலர்
அறந்தாங்கி நகராட்சி